**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**
**Uni5 பக்த விஜயம் - ஸ்ரீமதி.கருமாபாய் அம்மையார்**

---

**வாழ்க்கையில் பணம் வசதியும் காலமும் அதிகம் பெற்றவர்களுக்கு இவர் ஓர் வழிகாட்டி.பாவ பக்திக்கு எல்லை இல்லை, ஆச்சாரம் இல்லை. பாவ பக்தி மூலம் ப்ரஹ்மத்தை எளிதில் தன்னுடன் பினைத்துக் கொள்ள முடியும்.தீய வினையால் ஏற்பட்ட விளைவுகளை மறக்க மனிதனுக்கு ஒரே வழி ஆன்மீகம் தான்!**

**விக்ரஹ ஆராதனை கலந்த தூய பாவபக்தி மூலம் இறைவனை எளிதில் உணர முடியும்.**

இன்றும் பூரி மஹா க்ஷேத்ரத்தில் ஜகன்நாதருக்கு இந்த அம்மையார் பாவனையில் தான் நிவேதனம் செய்யப் படுகின்றது.

**நமக்கு முன் செல்லும் விதி**

பூரியில் பிறந்தவர் ஸ்ரீமதி கருமா பாய்.செல்வக் குடும்பத்தில் வாழ்ந்தவர். ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டவர். முறையே குரு மூலம் உபதேசம் பெற்று பல அரும் பணிகள் செய்தார்.ஆனால் கல்யாணம் ஆகி ஏழு மாத கர்ப்பினியாக இருக்கும் போதே கணவரை இழந்தார்.அதை இறைவனின் லீலை என்றே எடுத்துக் கொண்டு மகனை வளர்த்தார். அவனையும் சிறந்த குணம் கொண்டு வாழச் செய்தார்.அவனுக்கும் மணம் முடித்தார்.அவருக்கு அவன் மூலம்ன் அழகிய பேரன் பிறந்தான். அவனை விட்டுவிட்டு ஒரு கல்யாணத்துக்குச் சென்றிருந்த மகனும் மருமகளும் ஆற்றுவெள்ளத்தில் பலியாயினர்.அந்தோ பரிதாபம்!

கருமா பாயின் நிலை எண்ணி ஊர் கலங்கியது.இவரோ அக்குழந்தையை அருமையாகத் தன் மகன் என எண்ணி வளர்த்தார்.அப்போது பெரிய அம்மை கண்டு அக்குழந்தையும் மறைந்தது.இதனால் மனம் துவண்ட அம்மையார் பல காலம் வினை வலிமையால் கலங்கிக் கிடந்தார்.தன் தீவினையை எண்ணி எண்ணி அழுதார்.***அவரது ஆன்மீகம் அவருக்குள் கூறும் சமாதானத்தை அவரது உணர்ச்சிவசப்பட்ட மனம் ஏற்றுக் கொள்ளவில்லை!*** காலம் கழிகிறது....

**தேரோட்டம் தந்த மனமாற்றம்**

வருடம் தோறும் ஜகன்நாதருக்குத் தேர்த் திருவிழா. ஜனக்கூட்டம் கடல் எனத் திரண்டது.அப்போது வ்ருந்தாவனத்தில் இருந்து ஒரு பாகவதக் கூட்டம் பூரி வந்த போது கருமாபயின் சமாராதனையில் கலந்து கொண்டனர்.அவரது நிலையை

எண்ணி அவர்கள் கலங்கினர்.அவர்களுள் ஒரு பக்குவம் பெற்ற அன்பர் கூறினார்,

**கட்டைக்குள் இருக்கும் குழந்தை**

***"அம்மா! மனம் தளரக் கூடாது.யார் நமக்கு உறவு? ஜகன்நாதன் தானே? அவனே அனைத்து உறவுகளின் ரூபம். அவன் இல்லாத பொருள் ஏது? தீவினையைக் கழித்து விட்டீர்கள். இருக்கும் காலத்தை வீணாக்காமல் இருக்கும் மஹா க்ஷேத்ரத்தில் பக்தியும் இதே போன்ற சேவைகளும் செய்க."*** என்று கூறி ஊருக்குள் சென்று அழகிய ஜகன்நாத மர விக்ரஹம் ஒன்றையும் வாங்கி வந்து அதற்கு ப்ராண ப்ரதிஷ்டை செய்து , "இதுவே உன் குழந்தை" என்று கூறி அவருக்கு பாவ பக்தியை எழுப்பிச் சென்றனர்.

அன்று முதல் அவர் பாவ பக்தியில் திளைக்க ஆரம்பித்தார்.
விக்ரஹத்துள் தன் உறவைக் கண்டார்.தன் மகனோ பேரனோ மருமகளோ எவரும் அதே ஜகன்நாதன் என்பதை உணர்ந்தார்.அதன் மூலம் அவர் அறிவு தெளிய, மனம் சமாதானம் ஆகியது.

ஒரு தாயின் நிலையில் இருந்து சதா விக்ரஹக் குழந்தையுடன் வாழ ஆரம்பித்தார்.அப்போது அவருக்குள் அத்வைத்த பாவம் கூடியது.

**கிச்சடி உண்ட மரக்குழந்தை**

அன்று பூரிக்கு வந்திருந்த ஒரு அன்பர் கூட்டம் அம்மையாரின் வீட்டில் தங்கியது.அதிகாலையில் அம்மையார் எழுந்து சுடு தண்ணீர் வைத்து விக்ரஹத்தைப் பாடிக் கொண்டே நீராட்டினார்.பின்னர் குளிக்காமலேயே சமையல் செய்து அதற்கு ஊட்டிவிட்டு பின் தன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அன்பர்களுக்கு மரியாதை செய்தார்.விக்ரஹ ஆராதனை அன்பர்கள் பார்க்கவில்லை.

"அம்மா! குழந்தை ஏதேம் வீட்டில் உண்டா?"

"ஆம்! வீட்டில் குழந்தை உறங்குகிறது.அது அழாது!"

"குழந்தையை நாங்கள் ஆசீர்வதிக்க விரும்புகிறோம், எடுத்து வாருங்கள்!"

"இதோ என் பிள்ளை, என் துணை, என் உறவு!" என்று விக்ரஹத்தைக் காட்டியவுடன் அன்பர்கள்,

"பரவாயில்லை, ஆனால் ஆச்சாரம் குறைத்து பக்தி வேண்டாமே!" என்று அறிவுரை கூறினர்.அதை அம்மையும் ஏற்றுக் கொண்டு அடுத்த நாள் அவர் அன்பர்கள் போல காலைக் கடன் முடித்துக் கொண்டு தளிகைக்குச் சென்றார்.

அதற்குள் பூரி கோயிலில் நிவேதனத்துக்குத் தயாரான பூஜாரிகள் ஜகன்நாதர் நிவேதனத்தை ஏற்க மறுப்பதை உணர்ந்தனர்.

***"இன்று கருமா பாயான யதோசை எனக்குப் பசிப்பதையும் கண்டு கொள்ளவில்லை.அவர் வெற்று ஆச்சாரச் செயல்களில் ஈடுபடுகிறார்.எனக்குப் பசி வேளை தாண்டிவிட்டது! வெற்று ஆச்சாரம் எமக்குத் தேவையில்லை!"*** என்று பூஜாரிகளின் உள் உணர்வில் ப்ரஹ்ம தத்வம் உணர்த்தியது.

இதை அவர்கள் கருமா பாயிடம் எடுத்துக் கூறி அவருக்கு புத்தி சொன்ன அன்பர்களுக்கும் கூற அவர்கள் பாவ பக்தியின் இலக்கணத்தை உணர்கின்றனர்.இந்நிலையில் தன் இறைவன் சாப்பிடவில்லை என்று உணர்ந்த அம்மையார், ***"என் கண்மணி! என் ஸ்ரீராமா! என் கோகுலபாலன் அல்லவோ?!"*** என்று கொஞ்சி சம்பாக் கிச்சடியை பாவ பக்தியால் எடுத்து ஊட்ட அவர் வீட்டு விக்ரஹம் வாய் திறந்து உண்டது.

இதை அடிப்படையாகக் கொண்டே பூதி க்ஷேத்ரத்தில் இன்றும் ஆச்சாரம் குறைவே! வெளிப்புற ஆச்சாரமும் அனுஷ்டானமும் உள் புறத்துள் இருக்கும் தெய்வீகத்தை உணர்த்த வேண்டும்.வெறும் வெளிப்புற ஆச்சாரம் சாதி வேற்றுமைக்கு வழி செய்து விட்டது.அதனால் பாவம் தான் ஏற்படும்.இறைவன் இடம் இருந்து அது நம்மை விலக்கிவிடும்!

ஹரி ஓம்!